

அமரர்

# சுப்பிரமணியம் தவமணி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த
31ம் நாள் நினைவு மலர்

02.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேராலை பளையை பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

# சுப்பிரமணியம் **தவமணி**

அவர்களின் 31ம் நாள் சிவபதப்
பேறுகுறித்த நினைவு மலர்

**02.02.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய்
அன்பும் பண்பும் நிறைந்த பேரொளியாய்
என்றும் எம்மை அரவணைத்தும் நெறிப்படுத்தியும்
எம் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
வழிகாட்டியாய்த் திகழ்ந்து

இன் முகத்துடனும் பாசத்துடனும் எல்லோர்க்கும்
நல்லவராய் மனிதருள் மாணிக்கமாய்
வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகி
விட்ட எமதருமை அன்னைக்கு

என்றும் உங்களை எம் நெஞ்சிலிருத்தி என்றும்
உங்கள் ஆசி வேண்டி எம் கண்ணீர்ப்பூக்களால்
அர்ச்சித்து இம்மலரினை உங்கள் திருவடிகளில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**



**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நிறைந்த தாய்

மண்மகிழ
16
11
1959

கண்நெகிழ
03
01
2018



## அமரர்

# சுப்பிரமணியம் தவமணி

## அவர்களின் திதிவெண்பா

ஆண்டு ஏவிளம்பி ஆனதொரு மார்கழியில்
பூண்ட அமரபக்கத் துதியையிலே – நீண்ட
புகழ் தவமணியாள் நித்திய வாழ்வினிலே
சிவன் பாதம் சேர்ந்தாள் சிறந்து.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

விநாயகனை வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியானாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தேற்றம்

முடிசார்ந்த மன்னரும் முற்றும் உள்ளோரும் முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் இந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே

(பட்டினத்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் தவமணி
## அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்



பெருமையும் சிறப்பும் மிக்க பேரூராம் பேராலை பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்லம்மா தம்பதிகளின் இல்லற வாழ்வின் இனிய பயனாய் பதினொரு பிள்ளைச் செல்வங்கள் இனிதாய்ப் பிறந்தனர்.

சந்திரமதி, தங்கராசா, இராசலட்சுமி, மனோன்மணி, யோகேஸ்வரி (அமரர்), மகேஸ்வரி, நவரத்தினம், இராசரத்தினம், தவமணி, கனகரத்தினம், விஜயலட்சுமி என்று இனிய திருப்பெயர்கள் சூட்டி பாராட்டிச் சீராட்டி வளர்த்து வரலாயினர்.

ஒன்பதாவது செல்வமான பெண்மகவுக்கு தவமணி என்று திருநாமம் சூட்டினர். அழகும், ஆளுமையும் கொண்ட பெண்ணாய் வளர்ந்து கல்வி கற்று மங்கைப் பருவ வயதை எட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் பேசும் படலம் ஆரம்பமாயிற்று. அவ்வேளையிலே புலோலியைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராமு வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் இல்லறப் பயனாய் கணபதிப்பிள்ளை ( அமரர்), தெய்வானை (அமரர்), சங்கரப்பிள்ளை, கந்தையா (அமரர்), இலட்சுமி ( அமரர்), சுப்பிரமணியம் ஆகிய அறுவரைப் பெற்றனர்.

மங்கைக் கேற்ற மணாளனாக சுப்பிரமணியம் அவர்களை மணம் முடித்து மகிழ்ந்தனர். பத்தாவுக் கேற்ற பதி விரதையாகி பேரறமாம் இல்லறத்தேர் இனிதே நகர்ந்தது. இல்லறத்தின் இல்பயனாய் முத்தான நான்கு பிள்ளைகளை ஈன்றெடுத்தாள்.

முரளிதரனுக்கு சுமித்திராவை மணம் முடித்து சபிறா, டானியா என்ற பேரக்குழந்தைகளையும் கண்டு குதூகலித்தார். இரண்டாவது மகளான கவிதா மாவீரர் ஆனபோது துவண்டு துடித்தார். மூன்றாவது மகள் தர்சினியை பிரசன்னாவிற்கு மணம் செய்து கொடுத்து அதன் பயனாய் குபேஸ், அனீஸ் , பவீஸ் என்ற பேரக்குழந்தைகளையும் கண்டு மகிழ்ந்தார்.கடைக்குட்டியான கோபிதரனை எப்போதும் தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

நல்லதோர் மனைவியாய் வல்லதோர் தாயாய், இனிய மாமியாய், பரிவுள்ள பாட்டியாய், உறவுகளைப் பேணும் உத்தமியாய் அயலாரை நேசிக்கும் அன்புடையாளாய் திகழ்ந்த தவம்.... மண்ணுலக வாழ்வு போதும் என்று எண்ணி, இறையடியை விரும்பி **03.01.2018** அன்று தனது **58** வது வயதிலே ஊரெல்லாம் கூடி ஓலமிட இறையடி அடைந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனின் உள்ளக் குமுறல்



அழுதழுது கண்ணீரும் காயவில்லை
தொழுதேத்தும் என்துணையைக் காணவில்லை
விளக்கேற்றும் பெருமாட்டி எங்கேயென்று
வழிதேடி விழி சிந்திக் காக்க வைத்தாய்
நிர்க்கதியாய் நான் நிற்க எங்கு சென்றாய்
நீண்ட துயில் கொண்டாயோ பாவியானேன்
போனவழி புரியவில்லை போகும் வழி தெரியவில்லை
வழி காட்ட வா தவமே! ஐயோ! என் பெருந்தவமே!

# பிள்ளைகளின் பேதலிப்பு



ஈரைந்து மாதம் இன்பமுடன் தாங்கி நின்று
பாரில் எமை ஈன்றவளே! பாசமழை பொழிந்தவளே!
அம்மா என்றழைத்தால் அருகோடி நீ வருவாய்
இம் மாநிலத்தில் நாம் வாழ வழி சொல்லி வைத்தாய்
பேரிடியைத் தந்த தென்ன பேசாமல் சென்ற தென்ன
பேதலித்து நாம் கதற விதி செய்த மாயமென்ன
ஐயோ! எம் அம்மாவே ஏனிந்த அவசரமோ?
காலனுக்குக் கண்ணில்லை கூற்று இது மெய்யே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுடன்....

மண்மகிழ
09
07
1983
கண்நெகிழ
11
03
2009



அமரர்

# சுப்பிரமணியம் கவிதா

ஓ! தங்கையே எம் கண்ணீரைக்
காணிக்கையாக்குகிறோம்.
மண்ணுலக வாழ்வில்
எண்ணங்கள் வண்ணங்கள்
எல்லாம் சிதைந்தனவோ? தங்கை கவிதா! உன் அருமை
இப்புவி தன்னில் செப்ப முடியாது.
உள்ளம் தன்னில் கள்ளமில்லா தங்கையே!
வெள்ளம் போல மனம் கரைகிறது
நல்ல உள்ளம் வெல்லும் சொல்லால் துயரம் ஆறாது
ஓ! தங்கையே!....
உன் இழப்பு தானை வரலாறு சொல்லும் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் ஏக்கம்

அருகிருந்து உங்களன்பைத்
தினம் பெறாப் பாவியர் நாம்
கடல் கடந்து வாழுகிறோம்
பதறியழ வைத்ததுமேன்
கூடு விட்டுப் பறந்திடவே
ஏனிந்த அவசரமோ?
நாடு விட்டு நாடு வந்து
கதறியழ விதியாச்சோ?

## பேரக் குழந்தைகளின் பேதலிப்பு

அம்மம்மா என்று எங்கள் குரல் கேட்டால்
அம்மம்மா உங்கள் அன்புக் குரல் அணைக்கும்
அப்பம்மா என்று நாமழைத்து நின்றிடவே
எப்பம்மாகாண்பேன் என்று தினம் கேட்டீரே!
இலங்கைக்கு நாம் வந்து யாரை இனிப் பார்ப்போம்
எங்களன்புப் பாட்டியை நாம் எங்கே தேடுவோம்
ஐயகோ!என்செய்வோம் எங்கேயினிக் காண்போம்
வையகம் உள்ளளவும் நாங்கள் வணங்கிடுவோம்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமக்கள் புலம்பல்

அன்பை எல்லையில்லாமல் எமக்கு தந்த எம் அன்னையே, எம்மை உன் வயிற்றில் சுமக்கவில்லை இருந்தாலும் நீயும் எமக்கு அன்னையே. எமையெல்லாம் நீ வாழும் காலம் வரை உன் நெஞ்சில் சுமந்தாயே அம்மா. இன்பத்திலும் துன்பத்திலும் எம்மை அரவணைத்து வாழ்க்கையைப் புரிய வைத்த எம் அன்னையே இனி எப்போ காண்போம் உனை. விழி மாற்றும் சிகிச்சை போல் உயிர் மாற்றும் வழி இருந்தால் எம் உயிரைக் கொடுத்து இருப்போம் எம் உயிரில் கலந்த உனக்காக கதறி அழுகிறோம் அம்மா. மறுபிறவியில் எம்மிடம் வந்திடம்மா எம் அன்புத் தாயே.

## வெளிநாட்டில் இருக்கும்பேரமக்கள்

சிறுவயதில் இருந்து உன் கடமையை தப்பாமல் செய்த அன்னைக்கு இணையான தாயே உம் கணக்கை தெரிந்து தான் எமைப் பார்க்க வருமாறு அழைத்தீரோ. நீங்கள் தொலைபேசியில் கதைக்கும் போது காட்டிய அந்தத் திருமுகம் எம் நெஞ்சில் மறக்கமுடியவில்லை அம்மா. வன்சொல் அறியாத எம் அன்னையே அறிவுரை கூட அடுத்தவர் அறியாமல் கூறுவீர்களே. உங்களைப் போல் இனி யார் உண்டு எமக்கு வருந்துகின்றோம் அம்மா எமை அணைத்திட மீண்டும் வா அம்மா. நீங்கள் சொர்க்கத்தில் இருப்பீர்கள் என்று தெரியும் அம்மா அங்கிருந்து எமை எப்பொழுதும் ஆசீர்வதியும் அம்மா. விடையனுப்பக் கூட வர முடியவில்லை அம்மா மன்னிப்புக் கேட்கிறோம் உன் மலர்ப்பாதந் தொட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் சகோதரிகள் புலம்பல்

எங்கள் சகோதரியே மாதவமே
உன்னைப் போல் எம்மை ஆதரிக்க
யாருமின்றி வாடுகின்றோம். மாரடைப்பு வருமென்று
தெரிந்து தான் எம் மீது இப்படி அன்பு செலுத்தினாயோ
சற்றும் நம்ப முடியவில்லை உன் இழப்பை. எமக்காக நீ
இன்னொரு முறை பிறந்து வருவாயா எம் சோதரியே.

## உற்றார் உறவினர்கள் புலம்பல்

சுற்றாத்தார்களையும் உன் உறவுகள் போல நினைத்து
அன்பு செலுத்தினாயே! எமக்கு உதவி தேவைப்படும்
பொழுதெல்லாம் ஓடிவருவாயே இனி யார் உண்டு எமக்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**
**(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயாங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைவொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



முற்றிற்று
திருச்சிற்றம்பலம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்



1. பாடசாலைச் சமூகம்
   கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசலை
   வட்டக்கச்சி.
2. டிசாந்து, தர்சன், மிதுசன்
3. விக்கினா, பிரவா, சண்ணா, சாத்
4. VCC- 2018 ( Commerce )
5. ந. சீலன்
6. நண்பன் - ச.நிது ( வட்டக்கச்சி. )
7. குறிஞ்சி விளையாட்டுக்கழகம்
   சந்தையடி, வட்டக்கச்சி.
8. நண்பர்கள்
   ஜனுசன் ( தம்பி ), தனோக்ஷன் (தனோஸ்),
   ஜனுசன் ( ஜான் )

---



# பதாதை வெளியிட்டோர்



1. ந. சீலன் - புடவை வாணிபம்
   வட்டக்கச்சி.
2. இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலைச் சமூகம்
3. சிங்கர் குழுமம், கிளிநொச்சி.
4. இ. காந்தன் ( பெறாமகன் )
5. வட்டக்கச்சி மத்திய கல்லூரி ( பழையமாணவர்கள்)
6. டிசாந் ( ஆட்டோ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத உயிரினங்கள்

| | | |
|---|---|---|
| அதிகநீர் அருந்தும் பறவை | – | புறா |
| மிகச்சிறிய முட்டையிடும் பறவை | – | தேன்சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | – | ஒட்டகச்சிவிங்கி |
| ஞாபக சக்தி கூடிய விலங்கு | – | யானை |
| நீலநிற இரத்தத்தையுடைய கடல் உயிரினம் | – | நண்டு, இறால் |
| பல்லில்லாத முலையூட்டி | – | தேவாங்கு |
| கடல் நீரைப்பருகும் ஒரேயொரு பறவை | – | பென்குயின் |
| பறக்கும் போதே தூங்கும் பறவை | – | ஆல்பட்றாஸ் |
| மிகப்பெரிய வாயுள்ள விலங்கு | – | நீர்யானை |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | – | எலி |
| நாக்கு இல்லாத ஊர்வன | – | முதலை |
| தான் உண்ட எலும்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய உயிரினம் | – | முதலை |
| நீந்த தெரியாத விலங்கு | – | ஒட்டகம் |
| எட்டுக்கால்களையுடைய உயிரினம் | – | சிலந்தி |

**இல்லா செய்திகள்**

பறவைகளுக்குப் பற்கள் இல்லை
சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை
பல்லி தண்ணீர் அருந்துவது இல்லை
எலிகள் இல்லாத நாடே இல்லை
ஒட்டகத்திற்கு பித்தப்பை இல்லை
குயில்கள் குளிர்காலத்தில் கூவுவது இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில பயனுள்ள அறிவு கேள்வி பதில்கள்

01. ஒரு தடவை கூட லோக் சபாவிற்கு செல்லாத இந்திய பிரதமர் யார்?
திரு. சரண்சிங்

02. உலக சுற்றுச்சூழல் தினம் எப்போது கடைப்பிடிக்கப்பட்டது?
ஜூன் 5

03. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
உதடு

04. ஒரு ஹெக்டார் என்பது எவ்வளவு ஏக்கர்?
கிட்டத்தட்ட 2.5 ஏக்கர்

05. வேர்க்கடலையின் அறிவியல் பெயர் என்ன?
அராக்கிஸ் ஹைபோஜியா

06. பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர் யார்?
விஸ்ணு சர்மா

07. வருடத்தின் ஒரே நாளில் 24 மணிநேரத்தில் பகலும், இரவும் சரியாக 12 மணிநேரம் மட்டும் வருவது எந்த நாளில்?
மார்ச் 21

08. மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?
22

09. ஈக்களில் சுவை உணர் உறுப்பு எது?
நாக்கு

10. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது?
மோகனாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

◆ கதிராமு + ◆ வள்ளிப்பிள்ளை

- ◆ கணபதிப்பிள்ளை
- ◆ தெய்வானை
- சங்கரப்பிள்ளை
- ◆ கந்தையா
- **சுப்பிரமணியம்**
- ◆ இலட்சுமி

◆ செல்லையா + ◆ செல்லம்மா

- சந்திரமதி
- தங்கராசா
- இராசலட்சுமி
- மனோன்மனி
- ◆ யோகேஸ்வரி
- மகேஸ்வரி
- ◆ **தவமணி**
- நவரத்தினம்
- இராசரத்தினம்
- கனகரத்தினம்
- விஜயலட்சுமி

**சுப்பிரமணியம் + தவமணி**

- முரளிதரன் + சுமித்திரா
  - சபிறா
  - டானியா
- ◆ கவிதா
- தர்சினி + பிரசன்னா
  - குபேஸ்
  - அனீஸ்
  - பவீஸ்
- கோபிதரன்

◆ அமரர்களைக் குறிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



**என்றென்றும்
எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த
நன்றிகள்**

எமது குடும்ப ஒளி விளக்கு **அமரர். சுப்பிரமணியம் தவமணி அவர்களின்** மரணச் செய்தி அறிந்து உடன்வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலமும், குறுந்தகவல் மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், நினைவுப் பதாதைகள் பிரசுரித்தோருக்கும், ஒவ்வொரு நிகழ்விலும் கூடஇருந்து மனோபலம் ஊட்டியவர்களுக்கும், தகனம், அந்தியேட்டி போன்ற கிரியைகளை ஆற்றிய குருவுக்கும், ஓதுவார்களுக்கும், எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இங்ஙனம்
குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்புகழ் பூவுலகம்

## வாழும் காலம் வரை அம்மா...!



தாயே கருவறையில் பாதுகாத்து
எங்களை உம் வயிற்றில் சுமந்தாய்
காலமெல்லாம் சுமந்தாய்
உம் நெஞ்சினில் ..
தாயென்று சொல்ல உண்ண உம்மை
மறந்தாய்
தாயே உறக்கம் தொலைத்தாய்
களைத்தாய் வியர்வையில் குளித்தாய்
நாங்கள் நலமாய் வாழவே..
வலிகள் எம்மைத்தாக்கினால்
வலிப்பதென்னவோ உமக்கல்லவா..
துயரங்களால் எம் விழி நனைந்தால்
துடைப்பது உம் விரல்களல்லவா..
சோதனையானாலும் வேதனையானாலும்
தோள்கொடுக்கும் தோழி நீங்களல்லவா..
அனுதினமும் போற்றப்படவேண்டும் உம் புகழ்
பூவுலகம் வாழும் காலம் வரை...! அம்மா

என்றும் அன்புடன்
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org